கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**,** கடலூர்

**O.S.No.92-2004** தேதி**: 23.03.2026**

வாதி தரப்பு சாட்சி -1 (சுதாகர், த/பெ.சிவசங்கர்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>**16** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(1) நான் தாக்கல் செய்துள்ள தஸ்தாவேஜீகள் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கிற்காக தாக்கல் செய்துள்ளேன். வா.த.சா.ஆ 23 ஆனது அசல் வழக்கு எண் 32/2004 உரிய மனு என்றாலும் அதில குத்தகைதாரர் ராமசந்திரனுக்கு ஆதரவாக இடைக்கால உறுத்துக்கட்டளை கொடுக்கப்பட்டது என்றாலும் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் அந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவு என்றால் சரிதான். இது பி**.**த**.**சா**.**ஆ**. 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** அந்த வழக்கு 23.03.2017 லேயே முடிவடைந்துவிட்டது என்றால் சரிதான்.

(2) இவ்வழக்கின் 16 ஆம் பிரதிவாதி அவ்வழக்கின் 9 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்சொன்ன வழக்கில் ராமசந்திரன் குத்தகைக்கு இருந்த இடம் தான் இவ்வழக்கின் 16 ஆம் பிரதிவாதி கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எனக்கு தமிழ் சரளமாக எழுதப்படிக்கத் தெரியும் என்றால் சரிதான். பி.த.சா.ஆ. 8 ல் 21 ஆம் பக்கத்தில் அசல் வழக்கு எண் 225/2003 உள்ள தீப்பானது வாதிகளை கட்டுப்படுத்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி ராமசந்திரன் அந்த வழக்கில் மேல்முறையீடு செய்தாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.03.23 17:26:55 +0530

கொடுத்த பிறகு சுவாதினம் எடுக்க பிரதிவாதிகள் சட்டப்படி முயற்சிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

(3) இந்த தீர்ப்பின் அடிப்படையில் தான் அசல் வழக்கு எண் 201/2019 ஆனது சுவாதினம் எடுப்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் அதில் என்னையும் ஒரு தரப்பினராக சேர்க்க நான் இடை கால மனு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் சரிதான்.

(4) அசல் வழக்கு எண் 225/2003 தீர்ப்பானது எனக்கு எதிராக பி.த.சா.ஆ. 8 ல் உறுசெய்யப்பட்டுள்ளதால் அது தவறானது என்று இவ்வழக்கில் கோர முடியாது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள தஸ்தாவேஜீகள் அனைத்தும் நீதிமன்றத்தை திசை திருப்புவதற்காக மட்டுமே என்றாலும் இவ்வழக்கிற்கு சம்மந்தம் அற்றது என்றாலும் சரியல்ல. 16 ஆம் பிரதிவாதியை பொருத்தவரையில் நல்லெண்ண கிரையதாரர் என்றால் சரியல்ல.

(5) எனக்கு இந்த வழக்கு தாக்கல் செய்ய எந்த வித முகாந்திரமும் இல்லை என்றாலும் இவ்வழக்கு தள்ளுபடிக்கு அறுகமானது என்றாலும் சரியல்ல.

பி.த.சா.ஆ, 8 மட்டும் குறியீடு செய்யப்பட்டது.

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2026.03.23 17:26:58 +0530

குறுக்கு விசாரணை முற்றிற்று .

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B

Digitally signed by PHEBE B
Date: 2026.03.23 17:27:02 +0530

***Additional District Munsif , Cuddalore.***